மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி. C. கலைவாணி**, B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் பங்குனித்திங்கள் 25 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 448/2021 -ல்**

**அசல் வழக்கு எண். 119/2019**

1. காரல்மார்க்ஸ்
2. முத்துபாண்டி
3. ஜமுனா மோகன் ...மனுதாரர்கள் /வாதிகள்

**// எதிர்//**

1. நாராயணன்
2. ஆணையர், மன்னார்குடி நகராட்சி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 04.04.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன், திரு.K. சிவசுந்தர், திரு. M. நிலவழகன், திரு. R.கண்ணதாசன் ஆகியோர்களும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார் அவர்களும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டும் வருகையில்லாததாலும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணைக்காக போடப்பட்ட வழக்கில் மனுதாரர் தரப்பில் காலதாமதத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு குறியீடு செய்ய உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி. அசல் வழக்கில் 10.12.2021ம் தேதியன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சில முக்கியமான ஆவணங்கள் தற்போது கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆவணங்களை உரிய நேரத்தில் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை. ஆகையால் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கால தாமதத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து வழக்கை மேல் நடத்தவேண்டும், இல்லாதபட்சத்தில் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணைக்காக போடப்பட்ட வழக்கில் இன்று காலதாமதத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு குறியீடு செய்ய உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனு, அபிடவிட்டில் கண்டுள்ள சங்கதிகள் சுத்தப்பொய்யும், மோசடியானது. 1ம் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை

மறுப்பதால் அவற்றை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபிக்கக்கடமைப்பட்டிருக்கிறார்கள். அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளவைகள் பொருத்து வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ எவ்வித குறிப்புகளும் இல்லாத நிலையில், அவைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர்கள்/வாதிகளால் தயார் செய்யப்பட்டவை ஆகும். அவைகள் இவ்வழக்கிற்கோ, வாதிகளுக்கோ எவ்வித நேரடி தொடர்பும் கிடையாது. தற்போது மனுவின் தோதுவிற்காக மனுதாரர்களால் பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைநிற்ககூடியதில்லை. வழக்கிற்கு தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்து பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கானது 10.12.2021ம் தேதியன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சில முக்கியமான ஆவணங்கள் தற்போது கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி ஆவணங்களை உரிய நேரத்தில் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கால தாமதத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.**1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளவைகள் பொருத்து வழக்குரையிலோ, நிரூபண வாக்கு மூலத்திலோ

எவ்வித குறிப்புகளும் இல்லாத நிலையில், அவைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர்கள்/வாதிகளால் தயார் செய்யப்பட்டவை என்றும், ஆவணங்களுக்கோ, இவ்வழக்கிற்கோ, வாதிகளுக்கோ எவ்வித நேரடி தொடர்பும் கிடையாது என்றும், தற்போது மனுவின் தோதுவிற்காக மனுதாரர்களால் பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**பிரச்சினை:-**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், ஆட்சேபணை, மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**2.** வாதிகளின் பொது அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது அலுவலர்களோ, ஆட்களோ, அத்துமீறி பிரவேசித்து சாலை அமைக்கக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சிக்காகப் போடப்பட்டிருந்தபோது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இரு தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலிக்கையில், அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி

தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.1 முதல் விசாரரணை தொடர்ச்சிக்காகப் போடப்பட்டுள்ள நிலையில், தற்போது கிடைத்துள்ள ஆவணங்களை காலதாமதத்துடன் தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதிலும், இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நம்பகத்தன்மை, செல்லும் தன்மை, தொடர்பு சம்மந்தமாக அசல் வழக்கில் குறுக்கு விசாரணை செய்வதற்கு எதிர்மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு இருப்பதை கருத்திற்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்திற்கொண்டும் நீதியின் பால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (08.04.2022)அவையறியப் பகரப்பட்டது.

C KALAIVANI Digitally signed by C KALAIVANI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள் :-</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

C KALAIVANI Digitally signed by C KALAIVANI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.